4 வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு. C. ராஜலிங்கம், பி.ஏ., பி. எல்., 4 வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**MCOP. 22 / 2022** நாள்: **12.02.2025** ம..சா.2 ராமலிங்கம்

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை -

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரவில்லை. என்னை காவல் துறையினர் விசாரித்தார்களா என்றால் இல்லை. இறந்துபோன பஞ்சலிங்கம் குடும்பத்தினர் எனக்கு தெரிந்தவர்கள் தான். முதல் தகவல் அறிக்கையில் கூறியுள்ளவாறு டிராக்டரில் பொருத்தியிருந்த டாங்கின் இடதுபுறத்தில் மோதி விபத்து ஏற்ப்பட்டது என்றால் சரிதான். பஞ்சலிங்கத்தின் அஜாக்கரதையால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. பஞ்சலிங்கம் குடும்பத்தினர் எனக்கு வேண்டியவர்கள் என்பதால் மனுதாரர்க்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

Sd/−C.Rajalingom,B.A.,B.L.,
4 வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.